சென்னை, முதல் வட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) செயல்முறை ஆணை

முன்னிலை: திருமதி.அ.ஜெயலட்சுமி, பி.இ., டி.எல்.எல்.,

சுருக்கம்

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது - சென்னை, 2ம் வட்டம், முத்திரை ஆய்வாளர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தமை - பணியில் சேர்ந்த நாளான 10.08.2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

ந.க.எண்.அ/1088/2022 நாள்: .03.2022

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.3406/PSD-12/2019, நாள்:15.02.2020
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/16386/2020-1, நாள்: 29.07.2020

*********

ஆணை:

பார்வை 1ல் படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக சென்னை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி பணியமர்வு செய்யப்பட்ட பணியாளர்கள் இச்சரக சார்நிலை அலுவலகங்களில் கலம் 3ல் காணும் நாள் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

அவர்களது தெரிவு உறுதி செய்யப்படுவதாக மேலே 1ல் படிக்கப்பட்ட தேர்வாணைய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்படவேண்டும்.

| வ. எண். | பணியாளர்களின் பெயர் பதவி மற்றும் அலுவலகம் | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப் படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு. க.சுரேஷ்குமார், இளநிலை உதவியாளர், முத்திரை ஆய்வர் அலுவலகம், 2ம் வட்டம், சென்னை | 10.08.2020 மு.ப. | 10.08.2020 மு.ப. |

மேலும், தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28-ன்படியும் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32-ன் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் மேற்காணும் நபர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல்

மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

இத்தகுதிகாண் பருவகாலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என்றும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் இது தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

24/6/20

தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்),
முதல் வட்டம், சென்னை-35.

பெறுநர்:

24/6

திரு.க.சுரேஷ்குமார், இளநிலை உதவியாளர்
முத்திரை ஆய்வர், 2ம் வட்ட அலுவலகம், சென்னை.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது.

1. தொழிலாளர் ஆணையர், சென்னை-6
2. தொழிலாளர் இணை ஆணையர்-1, சென்னை-6
3. தொழிலாளர் கூடுதல் ஆணையர், சென்னை-6

நகல்: பணிப்பதிவேடு/இருப்புக்கோப்பு